IN THE COURT OF SUBORDINATE JUDGE, ERANIEL.
EA. No. 12/2026
in
E.P.No.22/2023
in
O.S.No.209/2010
Deposition of Witness for PW.1

Name : திரு.சுதாகர்
Father Name :
Age :
Calling :
Village :
Taluk :
District :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 31.07.2026.

சத்தியபிரமாணத்தின் பேரில் சாட்சியமளிக்கிறார்.
11 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:

நான் பட்டிகை சொத்தை பதினோராவது எதிர்மனுதாரர்களும் இருந்து தான் விலைக்கு வாங்கினேன் என்றால் ஆமாம் நான் பட்டிகை சொத்தை வாங்கும் பொழுது 11 வது எதிர்மனுதாரர் அவருடைய கைவசத்தில் வைத்திருந்தார் என்றால் ஆமாம். 16 வது எதிர்மனுதாரர் பட்டிக்கு சொத்தைபத்மநாதபுரம் சார்பு நீதிமன்றத்தில் ஏலத்தின் மூலமாக வாங்கி அதை ஒழிப்பித்துக் கொண்டார் என்றால் ஆமாம்.பதினோராவது எதிர்மனுதாரர் சொத்தை என்னிடம் விற்பனை செய்யும் பொழுது அந்த சொத்து குண்டான ஏல சான்றிதழ் மற்றும் ஒழிப்பித்து சான்று கொடுத்தார் என்றால் ஆமாம். பதினோராவது எதிர்மனுதாரர் பட்டிகை சொத்தை ஏலத்தின் மூலமாக கிரையம் பெற்று நீதிமன்றத்தின் வாயிலாக சுவாதீனம் பெற்றதால் அவருக்கு மட்டும்தான் அந்த சொத்தில் உரிமை இருக்கிறதே தவிர மற்ற நபர்களுக்கு இல்லை என்றால் ஆமாம். 11 வது எதிர்மனுதாரிடம் இருந்து சொத்தை வாங்கிய பிறகு இன்றைய தேதி வரை நான்தான் சுவாதீனம் வைத்து அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். அந்த

சொத்தை தற்பொழுது நான் வாங்கி வீடு கட்டி தாமசித்து வருகிறேன் என்றால் ஆமாம்.

<u>இரண்டு முதல் நான்கு எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

என் அப்பா பெயர் என்ன என்றால் வின்சென்ட் அவர் இன்று நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறாரா என்றால் வந்திருக்கிறார். எதற்காக என் மீது அவர் பவர் எழுதி கொடுத்தார் என்றால் நான் வெளிநாட்டில் வேலை பார்ப்பதால் அவருக்கு பவர் எழுதி கொடுத்து இருந்தேன் தற்பொழுது நான் வந்து விட்டதால் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன். நான் இடைக்கால மனு எண் 12/26 இல் மனுதாரர் என்றால் ஆமாம்.இந்த மனதில் உள்ள ஐந்தாவது எதிர்மனுதாரர் 02.08.2004 அன்று ரூபாய் 4,85,000 க்கு ஈடுபத்திரத்தை ஆவண எண் 1121/2004 வாயிலாக எழுதிக் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது.அந்த ஈடு கடன் பத்திரத்தில் ரீ சர்வே நம்பர் A2/63 சொத்தில் உள்ள கதவு எண் 2/23F உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

அதன் விஸ்திரணம் ஐந்து சென்ட் என்றால் ஐந்து சென்ட் என்பது எனக்கு விலைக்கு வாங்கிய பிறகு தான் தெரியும்.ஸ்ரீதரன் என்பவர் அசல் வழக்கு எண் 67/2007 வழக்கு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.அந்த வழக்கை அவர் 24.7.2007 ல் தாக்கல் செய்தார் என்றால் எனக்கு தெரியாது.அதன் பிறகு சார்பு நீதிமன்றத்தின் அதிகார வரம்பு உயர்த்தப்பட்டதால் மாவட்ட நீதிமன்றத்தில் இருந்து அந்த வழக்கு சார்பு நீதிமன்றம் பத்மநாதபுரத்திற்கு மாற்றப்பட்டது என்றால், எனக்கு தெரியாது.அந்த வழக்கில் பிரதிவாதிக்காக வழக்கறிஞர் ராஜன் வக்காலத்து தாக்கல் செய்தார் என்றால், தெரியாது.அந்த உனக்கு பத்மநாதபுரம் சார்பு நீதிமன்றத்தில் 14/9/2012 தீர்ப்பானது என்றால், சொத்தை நான் வாங்கிய பிறகு அதை தெரிந்து

கொண்டேன். அந்த தீர்ப்புக்கு பிறகு 02.06.2014 ல் இறுதிநிலை தீர்ப்பாணை வாதிக்கு ஆதரவாக பிறப்பிக்கப்பட்டது என்றால், அது தெரியாது.இந்த மனுவில் உள்ள ஐந்தாவது எதிர்மனுதாரர் ஒரு செல்லப்பன் என்பவருக்கு ரூ.2,50,000/ கடன் உறுதி சீட்டை29.6.2004 இல் எழுதிக் கொடுத்தது தொடர்பாக 27.6.2007 அன்றுபத்மநாதபுரம் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 126/207 வழக்கை தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் நான் சொத்தை வாங்கிய பிறகு அதை தெரிந்து கொண்டேன்.அந்த வழக்கு ஒரு தலை பட்சமாக வாதிக்கு சார்பாக தீர்ப்பானது என்றால் நான் வாங்கிய பிறகு தான் அந்த விபரங்கள் தெரியும் ஒரு தலைப்பட்சமான தீர்ப்பா என்பது எனக்கு தெரியாது.அந்த செல்லப்பனுடையவாரிசுகளாக ஆறு முதல் பதினோராவது எதிர்மனுதாரர்களை இந்த மனுவில் நான் சேர்த்து இருக்கிறேன் என்றால், ஆமாம்.

பத்மநாதபுரம் சார்பு நீதிமன்ற நிறைவேற்று மனு எண் 57/2008 ல் உள்ள வழக்கில் ஏலம் மூலமாக சொத்தை பெற்றதாக தான் நான் வழக்கில் சொல்லி இருக்கிறேன் என்றால் ஆமாம்.மேற்படி நிறைவேற்று மனு நிலுவையில் இருக்கும் பொழுது அந்த நீதிமன்றத்தில் வில்லங்க சான்றிதழ்களை நான் தாக்கல் செய்தேனா என்றால் நான் ஏலம் மூலமாக வாங்கவில்லை சொத்தை ஏலத்தில் வாங்கியவர்களிடமிருந்து தான் நான் வாங்கி இருக்கிறேன்.வில்லங்க சான்றிதழ்களை நான் பெற்றுதான் விலைக்கு வாங்கினேன் என்றால் ஆமாம்.நான் உண்மையிலே 2004 இல் வில்லங்க சான்றிதழை வாங்கி பார்த்திருந்தேன் என்றால் ஈடு கடன் பத்திரம் அந்த வில்லங்க சான்றிதழில் வந்திருக்கும் என்றால், நான் வாங்கிய வில்லங்க சான்றிதழில் நீதிமன்ற ஏலத்தில் சொத்தை பெற்றது மட்டும் தான் இருந்தது.வில்லங்க சான்றிதழை பார்க்காமல் ஏலம்

நடந்திருந்தால் அந்த ஏலம் செல்லாது என்றால், நீதிமன்றம் மூலமாக பொது இடத்தில் ஒழிப்பித்தல் சான்றிதழ் மூலமாக விற்பனை செய்ததால் அவர் வாங்கி இருக்கிறார்.பத்மநாதபுரம் சார்பு நீதிமன்றத்தில் ஏலம் மூலமாக கிரையம் பெற்ற சுந்தர் என்பவரை இந்த வழக்கில் நான் 11 வது எதிர்மனுதாரராக சேர்த்திருக்கிறேன் என்றால் ஆமாம்.ஏலம் பிடித்தவருக்கு இந்த சொத்தில் எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியில்ல அவர் எனக்கு விலைக்கு கொடுத்ததில் ஏல சான்றிதழ் மற்றும் ஒழிப்பிப்பு சான்றிதழ் உட்பட அனைத்து ஆவணங்களையும் பார்த்துதான் நான் விலைக்கு வாங்கினேன்.பத்மநாதபுரம் சார்பு நீதிமன்றத்தின் வாயிலாக நிறைவேற்று மனுவில் இடைக்கால மனு தாக்கல் செய்து அதில் சுவாதீனம் எடுத்தது செல்லுபடி ஆகாது என்றால், சரியல்ல நீதிமன்றம் மூலமாக கிடைத்ததால் செல்லுபடியாகும் அதன் அடிப்படையில் தான் நான் விலைக்கு வாங்கினேன்.நீதிமன்றம் மூலமாக சுவாதீனம் எடுத்ததே செல்லுபடியாகாது என்பதால் நான் சுந்தர் என்பவரிடமிருந்து 26.11.2012 அன்று விலைக்கு வாங்கியதும் செல்லாது என்றால்சரியல்ல.என்னுடைய விலை ஆவணப்படி எனக்கு எந்த உரிமையும் கிடைக்காது என்றால், சரியல்ல விலை மதிப்புகள் எல்லாம் கொடுத்து தான் நான் சொத்தை வாங்கினேன். சொத்தை ஏலத்திற்கு எடுப்பதற்கு முன்பு அந்த சொத்து ஈடு கடன் பத்திரத்தின்படி அடமானத்தில் உள்ளது விவரம் தெரிந்து கொண்டு என் அப்பா சாட்சியளிக்க வராமல் எனக்கு பொது அதிகார பத்திரம் எழுதிக் கொடுத்திருக்கிறார் என்றால், சரியல்ல நான் வெளிநாட்டில் இருந்ததால் என்னால் முன்பு வர முடியவில்லை தற்பொழுது வந்து விட்டேன் அதனால் நான் சாட்சியம் அளிக்கிறேன் நான் எந்த விலை ஆதாரமோ அல்லது விலைக்கு ஆன தொகையை கொடுக்காமல் தீர்ப்பு பெற்றவரை கஷ்டப்படுத்த வேண்டும் என்ற ஒரே எண்ணத்தில் விலை கொடுத்ததாக

ஒரு ஆவணத்தை தயார் செய்து கொண்டு இந்த வழக்கை நடத்துகிறேன் என்றால், இல்லை. நான் இந்த மனுவில் bonafide purchaser என்று சொல்வது பொய் என்றாலும் எல்லா விவரங்களும் தெரிந்து கொண்டே இந்த வழக்கில் நான் பொய்யாக மனுதாக்கல் செய்து பொய்சாட்சி மளிக்கிறேன் என்றாலும் இல்லை நான் ஆவணங்களின் அடிப்படையில் தான் சொத்தை வாங்கினேன். இந்த நிறைவேற்று மனு தாக்கல் செய்த பிறகு ஸ்ரீதரன் இறந்துவிட்டார் என்றால் ஆமாம் அதன் பிறகு அவர்களது வாரிசை சேர்த்து இருக்கிறார்கள். அன்ன செல்வம், அனுசியா, ஆனந்தகண்ணன் அவர்களுடைய வாரிசுகள் என்றால் வாரிசுகளாக சேர்த்து இருக்கிறார்கள். தீர்ப்பு பெற்றவரை கஷ்ட நஷ்டப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த மனு தாக்கல் செய்ததால் இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல நான் சொத்தை சுந்தர் என்பவரிடமிருந்து அனைத்து ஆவணங்களையும் பார்த்துவிட்டு விலை கொடுத்து தான் வாங்கி இருக்கிறேன்.

மறு விசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.